# கடந்த ஒரு மாதத்தில் த.வெ.க.வினர் செய்த குற்றச் சம்பவங்கள்!


































தமிழ்நாட்டை மோசமான சூழ்நிலைக்கு கொண்டு செல்லும் த.வெ.க. அரசு!

## குற்றங்களை மூடி மறைக்கும் வழியையே தேடுகின்றனர்!

### கனிமொழி கருணாநிதி எம்.பி. குற்றச்சாட்டு!



**சென்னை, ஜூன் 18-**

**சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேற்று முன்தினம் (16.06.2026) செய்தியாளர்களின் கேள்விகளுக்கு, தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி பதிலளித்தார். அப்போது கூறுகையில், நாட்டில் நடைபெறும் குற்றங்களை மூடி மறைக்கும் அரசாக த.வெ.க. அரசு உள்ளது எனக் குற்றம் சாட்டினார்.**

கனிமொழி கருணாநிதி எம்.பி கூறியதாவது:-

பெண்களுக்கு எதிரான குற்றங்கள் நடைபெறுகிறது என்று பொய்யான பிரச்சாரத்தை முன்னிறுத்தியே த.வெ.க. ஆட்சிக்கு வந்துள்ளார்கள். அப்படிப்பட்டவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு, ஒவ்வொரு நாளும் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. மிக முக்கியமாக, குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. அதைப் பற்றி, அரசு எந்தக் கவலையும் அக்கறையும் இல்லாத அளவுக்குத் தான் அவர்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

**எம்.எல்.ஏ.வின் மோசமான செயல்!**

அதைவிட மோசமாக, அந்தக் குற்றத்தை எப்படி மூடி மறைப்பது என்பதற்கான வழிகளைத்தான் இன்று அவர்கள் தேடிக் கொண்டிருக்கிறார்கள். இன்று, ஒரு குழந்தையின் பிரேதப் பரிசோதனை (ஆட்டோப்சி) நடைபெறும் இடத்திற்கே ஒரு எம்.எல்.ஏ. உள்ளே சென்று, அந்தக் குழந்தையின் பெற்றோருடன் பேரம் பேசும் அளவுக்கு மிக மோசமான நிலை ஏற்பட்டுள்ளது.

எங்களுடைய மகளிரணியைச் சேர்ந்த சகோதரி ஒருவர் அந்த நிகழ்வை நேரில் பார்த்திருக்கிறார். எனவே, இப்படிப்பட்ட ஒரு மிக மோசமான சூழலில் தான் தமிழ்நாட்டை கொண்டுபோய் அவர்கள் தள்ளியிருக்கிறார்கள்.

**சிங்கப்பெண் படைக்கு என்ன அதிகாரம்?**

சிங்கப்பெண் அமைக்கப்பட்ட பிறகும் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரிப்பது ஏன்? என்ற கேள்விக்கு, குற்றச் சம்பவங்கள் அதிகரித்துக் கொண்டுதான் இருக்கிறது. ‘சிங்கப்பெண்’ படை என்று பெயர் மாற்றம் செய்து வழங்கியதைப் பற்றி கூட நாங்கள் பெரிதாகப் பேச விரும்பவில்லை. ஆனால், அவர்களுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது? அவங்களுக்கு தனிப்பட்ட முறையில் ஒரு தொலைபேசி எண் கூடக் கிடையாது.

ஏதேனும் ஒரு குற்றச் சம்பவமோ அல்லது பிரச்சினையோ ஏற்பட்டால், பாதிக்கப்பட்டவர்களைக் காப்பாற்றுவதற்காக மகளிர் ரோந்து வாகனத்தைத் தொடர்புகொள்வதற்கான வழிவகை கூட இல்லை. இவ்வாறான சூழலில், குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் ஒவ்வொரு நாளும் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன. இப்படி ஒரு சூழலில், முதலமைச்சர் இதுவரைக்கும் வாய் திறந்து ஒரு வார்த்தை கூட இதைப் பற்றி பேசுவத்திற்கு தயாராக இல்லை.

**மக்கள் மீது அக்கறையற்ற அரசு!**

அப்படியிருக்கும்போது, மக்கள் மீதும், பெண்கள் மீதும், குழந்தைகள் மீதும் இந்த அரசுக்கு எந்த அக்கறையும் இல்லை என்பது தெளிவாகிறது. மேலும், முதலமைச்சரின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் காவல்துறையைப் பற்றிக் கூட அவர் அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை.

பாலியல் குற்றங்களில் ஆளுங்கட்சியினருக்கும் தொடர்பு இருப்பதாக என்ற கேள்விக்கு, நிறைய சம்பவங்களில் ஆளுங்கட்சியினரே ஈடுபட்டு இருப்பதாகத் தெளிவாகத் தெரிகிறது. ஒழுக்கம் மற்றும் போதை பொருள் பற்றி பேசுகிறார். ஆட்சியாளர்கள் அவர்களுடைய கடமையிலிருந்து தவறுகிறார்கள். அதுமட்டுமில்லாமல், பல நேரங்களில் பெண்களுடைய உடை தான் அவங்களுக்கு எதிராக குற்றங்கள் நடைபெறுகிறது என்று அவரின் திரைப்படங்களில் பேசிவிட்டு தான் ஆட்சிக்கு வந்துள்ளார். பெண்கள் மீதே இந்தக் குற்றங்களை அவர்கள் திருப்புகிறார்களா என்று தெரியவில்லை.

**குற்றச்செயல்களில் ஆளுங்கட்சியினர்!**

பாலியல் குற்றங்களில் ஆளுங்கட்சியினருக்கும் தொடர்பு இருப்பதாகக் கூறப்படுவது குறித்து கேட்கப்பட்ட கேள்விக்கு, “பல சம்பவங்களில் ஆளுங்கட்சியினரே தொடர்புடையவர்களாக இருப்பது தெளிவாகத் தெரிகிறது. தனி மனித ஒழுக்கம் மற்றும் போதைப்பொருள் குறித்து அவர்கள் தொடர்ந்து பேசுகிறார்கள். ஆனால், ஆட்சியாளர்கள் தங்களுடைய அடிப்படைக் கடமைகளிலிருந்தே தவறி வருகிறார்கள்.

அதுமட்டுமல்லாமல், பெண்களின் உடையால் தான் அவர்களுக்கு எதிரான குற்றங்கள் நடைபெறுகின்றன என்ற கருத்துகளை அவருடைய திரைப்படங்களில் பேசியவர்தான் இன்று ஆட்சிப் பொறுப்பில் இருக்கிறார். எனவே, பெண்கள் மீதே இந்தக் குற்றங்களை அவர்கள் திருப்புகிறார்களா என்று தெரியவில்லை.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. தெரிவித்தார்.

## ஈவு இரக்கமற்ற த.வெ.க.வின் காட்டாட்சி வீழ்வது உறுதி!

### சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பதிவு!

**சென்னை, ஜூன் 18 -**

**த.வெ.க. ஒரு ஈவு, இரக்கமற்ற காட்டாட்சி. அது வீழ்வது உறுதி என்று சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.**

**குழந்தைகள், பெண்கள் மீதான பாலியல் வன்முறைகள் தமிழ்நாட்டில் அதிகரித்து வருவது தொடர்பாகவும் அதிலும் குறிப்பாக நேற்று முன்தினம் (திங்கள்) ஒரே நாளில் நடைபெற்ற பாலியல் வன்முறைகள் தொடர்பாகவும் தமது சமூக வலைதளப் பக்கத்தில் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கீழ்க்கண்டவாறு பதிவிட்டுள்ளார்.**



24 மணி நேரத்தில் 12 பாலியல் வன்கொடுமைகள் நடந்திருக்கின்றன.

நீங்கள் appoint செய்ததாக சொன்ன efficient officers என்ன செய்கிறார்கள் முதலமைச்சர் அவர்களே?


பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகி உயிரிழந்த குழந்தைகளைப் பெற்றவர்களுக்குத் தெரியாமலேயே வேறு இடத்தில் அடக்கம் செய்யும் அளவுக்கு **நீங்கள் நடத்தும் ஈவு, இரக்கமற்ற காட்டாட்சி வீழ்வது உறுதி!**

இவ்வாறு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

ஒன்றிய அரசின் சங்கீத நாடக அகாடமி – நடிகர்

## வாகை சந்திரசேகருக்கு ‘யுவ புரஸ்கர்’ தேசிய விருது!

### நாட்டின் உயரிய விருதாகும்!



**புதுடெல்லி, ஜூன் 18 -**

**ஒன்றிய அரசின் சங்கீத நாடக அகாடமி ‘யுவ புரஸ்கர்’ தேசிய விருதினை நடிகர் வாகை சந்திரசேகர் அவர்களுக்கு வழங்கியுள்ளது.**

இது பற்றிய விவரம் வருமாறு:-

மத்திய அரசின் சங்கீத நாடக அகாடமி “யுவ புரஸ்கர்” தேசிய விருது நடிகர் வாகை சந்திரசேகருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது

மத்திய அரசின் கலாச்சார அமைச்சகத்தின் கீழ் இயங்கும் சங்கீத நாடக அகாடமி விருது (Sangeet Natak Akademi Puraskar) இந்தியாவின் இசை, நடனம், நாடகம் மற்றும் நாட்டுப்புறக் கலைகளுக்கு வழங்கப்படும் மிக உயரிய தேசிய விருதாகும்

இசை, நடனம், நாடகம், பாரம்பரிய /நாட்டுப்புறக் கலைகள் மற்றும் பொம்மலாட்டம் கலைகளுக்கான ஒட்டுமொத்த பங்களிப்பு அல்லது ஆராய்ச்சி என 5 பிரிவுகளில் இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன